பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை:7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: கார்த்திகை 20உ (6—12—67) புதன் வெளியூர்: கார்த்திகை 21உ (7—12—67) வியாழன் [இதழ்: 145

வாழை-கரும்புத் தோட்டங்கட்கு முன்னெச்சரிக்கை!

சென்னை, டிச. 5—
தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்தில் கடும் காற்றும் மழையும் ஏற்படக்கூடும் என வானிலை அறிக்கை அறிவித்துள்ளதையொட்டி, வாழை, கரும்புத் தோட்டங்கள் பாதிக்கப்படாமல் காப்பதற்காக, வாழை மரங்களுக்கும், கரும்புகளுக்கும் சிம்பு முட்டுக் கொடுத்துவைத்துக் கட்டுமாறு வேளாண்மைத் துறை அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆட்சிமொழித் திருத்த மசோதாவைத் தள்ளிப்போட முயற்சி

தலைமையமைச்சர் ஒப்புக்கொள்ளவில்லை

நடப்புக் கூட்டத் தொடரிலேயே நிறைவேற்ற அரசு தீவிரம்

புதுடில்லி, டிச. 6—
ஆட்சிமொழித் திருத்த மசோதா மக்களவையில் நேற்றும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை; இன்றும் ஆய்வுக்கு வரவில்லை; நாளை (டிச. 7) கொண்டுவரப்படலாம் என்று தெரிகிறது.

நேற்று ஆய்வுக்கு வராததைப் பயன்படுத்திக்கொண்டு இந்தி வெறியர்கள், தங்கள் திருத்தங்களை ஏற்குமாறு அரசை நிர்ப்பந்திக்கும் முயற்சிகளில் தீவிரம் காட்டினர்.

'மசோதாவை கூட்டுப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டும்' என்ற கோரிக்கையைக்கூட அவர்கள் ஏற்கத் தயாராயில்லை எனத் தெரிகிறது.

'இந்த மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதை ஒத்திவைக்க வேண்டும்' என்ற கோரிக்கையைத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி ஏற்க மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.

நாடாளுமன்ற மேலவை எதிர்க்கட்சித் தலைவர்களுடன் நடத்திய விவாதத்தில், தலைமையமைச்சர் இந்திரா காந்தி, இந்தக் கோரிக்கையை நிராகரித்ததாகச் சொல்லப்படுகிறது.

"மசோதாவை இப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளாமல் ஒத்திவைத்தால், அது, மக்கள் மனத்தில் தப்பெண்ணத்தை உண்டுபண்ணும்" என்று இந்திரா காந்தி தெரிவித்ததாகத் தெரிகிறது.

நாடாளுமன்ற நடப்புக் கூட்டத் தொடரிலேயே மசோதாவை நிறைவேற்றிவிட அரசு உறுதி கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

"ஆட்சிமொழித் திருத்த மசோதாவை ஒத்திவைக்க வேண்டும்" என்று நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் இராஜநாராயணன் கூறிய யோசனையை, மற்றவர்கள் ஏற்கவில்லை; 'நேருவின் உறுதிமொழியைச் செயல்படுத்துவதில் ஏற்கனவே தாமதம் காட்டப்பட்டிருக்கிறது' என்றும், 'அதை இன்னமும் தள்ளிப்போட முடியாது' என்று கருத்தறிவிக்கப்பட்டது.

இந்தி பேசும் மாநிலங்களைச் சேர்ந்தவர்களுடனும், இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்தவர்களுடனும் நடத்தக்கூடிய ஆலோசனைகளிலிருந்து உருவாகும் உருப்படியான யோசனைகளை வரவேற்பதாக தலைமையமைச்சர் கூறியதாகத் தெரிகிறது; 'இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஒருவருக்கொருவர் நல்லெண்ணம் காட்டுவது தேவை' என்றார் அவர்!

இந்தி வெறியர்களின் மிரட்டல்!

புதுடில்லி, டிச. 6—
"இந்தி பேசும் மாநிலங்களைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதாவை எதிர்க்காவிட்டால், அவர்களுக்கு கறுப்புக் கொடி காட்டப்படும்; நாடாளுமன்றக் கூட்டம் முடிந்து திரும்பும் போது அவர்களை 'கேரோ' செய்வார்கள்"

என்றெல்லாம் மிரட்டிப் பல தந்திகள், இந்தி மாநிலத்தைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

இந்த மிரட்டல் தந்திகள், அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்த 'சமாஜ்வாடி யுவக் சங்க'க் கிளைகள் சார்பில் அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

காங்கிரசு உறுப்பினருக்குச் சூடச்சூடப் பதில்!

'அரிசி விலை ரூ. 2.50 தமிழகத்தில் அல்ல'-அர்த்தமற்ற குற்றச்சாட்டுக்கு கழக உறுப்பினரின் மறுப்பு

புதுடில்லி, டிச. 5—
"தமிழ்நாட்டில் உள்ள சில பகுதிகளில் ஒரு படி அரிசி ரூ. 2·50-முதல் ரூ. 4-வரை விற்கப்படுகிறது" என்ற காங்கிரசு உறுப்பினரின் ஆதாரமற்ற குற்றச்சாட்டை, மக்களவையில், கழக உறுப்பினர் மறுத்து, 'அப்படிப்பட்ட அதிக விலைக்குப் புதுடில்லியில் உள்ள கெனட்பிளேசில் தான் விற்கப்படுகிறது' என்றும், 'தமிழகத்தில் இல்லை' என்றும் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரசு உறுப்பினரான ஆர். எஸ். ஆறுமுகம், பேசுகையில் தான், தமிழ்நாட்டில் அதிக விலைக்கு அரிசி விற்கப்படுவதாகக் கூறினர்; இதற்குக் கழகத் தரப்பிலிருந்து சுடச்சுடப் பதில் கிடைத்தது.

"விவசாய வருமானத்தின்மீது இனி எத்தகைய வரியையும் விதிக்கக்கூடாது" என்று நாடாளுமன்ற மக்களவையில், உணவுப் பிரச்சினைபற்றி நடைபெற்ற விவாதத்தில் காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

"கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பஞ்சத்தின் காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்" என்றும்,
"நல்ல விளைச்சலை எதிர்பார்க்கும் இந்த ஆண்டில் அவர்கள் மீது அரசு வரி விதிப்பதைப் பற்றி நினைக்கவேகூடாது" என்றும் அவர்கள் கருத்தறிவித்தனர்.

"உழவர்களுக்குத் தேவையான பொருள்கள் வழங்கப்படுமானால், இந்திய உழவர்கள், நாடு தன்னிறைவு பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவார்கள்"

என்று இவ்விவாதத்தில் பங்குபெற்ற கழக உறுப்பினர் திரு. அரூர் முத்து பேசுகையில் குறிப்பிட்டார்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள சீக்கிய உழவர்கள், தங்கள் நிலங்களை அமெரிக்க மக்களைக் காட்டிலும் நன்றாகவே பராமரித்து வருவதாகவும் அவர் சொன்னார்.

"உரங்களின் விலையைக் குறைக்க வேண்டும்; போதுமான உரமில்லாவிட்டால் அதிக விளைச்சல் தரக்கூடிய விதைகளைப் பயன்படுத்த முடியாது"

என்றும் அவர் தெரிவித்தார்.

"தமிழக நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு இன்னும் அதிக நிதி உதவி அளிக்கவேண்டும்; சோவியத் நாட்டிலிருந்து குறைந்த விலையில் டிராக்டர்களைத் தருவித்து, தமிழ்நாட்டு உழவர்களுக்கு வழங்கவேண்டும்"

என்றும் அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

"ஆண்டு ஒன்றுக்கு ஒரு மில்லியன் கிணறுகள் வெட்டப்படுமானால் பஞ்சநிலை அகற்றப்பட்டுவிடும்"

என்றும் அவர் தெரிவித்தார்,

வேலையிழந்த ஆலைத்தொழிலாளருக்கு தமிழக அரசு உதவி

அண்ணா அளித்த உறுதிமொழிப்படி ரூ. 2 இலட்சம் அனுமதி

கோவை, டிச. 6—
கோவையில் மூடப்பட்ட ஆலைகளில் பணியாற்றிவந்த தொழிலாளர்கள் வேலையில்லாமல் அவதிப்படுவதையொட்டி, அவர்களுக்கு உதவும் பொருட்டு, தமிழக அரசு ரூ. 2 இலட்சம் அனுமதியளித்துள்ளது.

இத்தகவலை, திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் அறிவித்துள்ளார்.

கடந்த திங்கள் 25-ஆம் நாள் தம்மைச் சந்தித்த தொழிலாளர் பிரதிநிதிகளிடம் முதலமைச்சர் அண்ணா அவர்கள் உறுதிமொழியளித்ததற்கிணங்க இந்த உதவி அளிக்கப்படுகிறது.

கோவையில் மூடப்பட்ட ஆலைகள் பல திறக்கப்பட்டுவிட்டன; கம்போடியா, காளீசுவரா, ரெங்கவிலாஸ் ஆகிய மூன்று ஆலைகள் மட்டுமே இன்னும் திறக்கப்படவில்லை; இவற்றையும் திறக்கத் தமிழக அரசு முயற்சியெடுத்துக் கொண்டிருக்கிறது.

இந்த ஆலைகளில் வேலை செய்த சுமார் 3,500 பேர் வேலையில்லாமல் இருந்துவருகின்றனர்.

தோழர் காட்டூர் கோபால் மேலும் தெரிவித்திருப்பதாவது:—
"பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அரசு உதவியளித்துள்ளது. மேலும் ஆலை அதிபர்களும், பொதுமக்களும் நிதி உதவுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட தொழிலாளர்கட்கு ஏனைய தொழிலாளர்களும் தங்கள் ஒருநாள் ஊதியத்தை வழங்கியுள்ளனர்; அதில், தொழிலாளர்களுக்குப் பட்டுவாடா செய்தது போக, ரூ. 80 ஆயிரம் மிச்சம் உள்ளது; இதுவும் தொழிலாளர்கட்குப் பகிர்ந்து வழங்கப்படும்."

வசதிபடைத்தவர்கட்கு ரேஷன் கார்டு ரத்து

அகமதாபாத், டிச 6—
வருகிற சனவரி முதல் நாளிலிருந்து வருமான வரி கட்டுபவர்கள், தங்களுக்குத் தேவையான தானியங்களை வெளிச் சந்தையில்தான் வாங்கிக்கொள்ள வேண்டும் என்ற உத்தரவை குசராத் அரசு பிறப்பிக்கும் எனத் தெரியவருகிறது.

"வருமான வரி கட்டுபவர்களின் பங்கீட்டு அட்டைகளை சட்டப்படி பயனற்றதாக்கக் குசராத் அரசு முடிவு செய்திருக்கிறது" என உணவு வழங்குதுறை அமைச்சர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

"சட்டப்படி வருமான வரி கட்டுபவர்களின் ரேஷன் கார்டுகள் பயனற்றதாக்கப்பட்டாலும், அவர்கள், நியாயவிலைக் கடைகளிலிருந்து சர்க்கரை வாங்க அனுமதிக்கப்படுவார்கள்; இதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன" என அமைச்சர் தெரிவித்தார்.

"இந்த நடவடிக்கையின் மூலம், வெளிச் சந்தையில் உணவுத் தானியங்களை வாங்க முடியாத ஏழை மக்களுக்கு இன்னும் அதிக அளவில் தானியங்கள் வழங்க முடியும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒரிசாவும் 'ஈர'மாகிறது!

மதுவை நோக்கி நகரும் மற்றொரு மாநிலம்!

★

நேற்று இரவு நடைபெற்ற ஒரிசா மாநில அமைச்சரவைக் கூட்டத்தில், மதுவிலக்கை மாநிலம் முழுவதும்—முற்றிலும்—நீக்கிவிடுவதென முடிவெடுக்கப்பட்டிருக்கிறது!

காங்கிரசல்லாத நிர்வாகத்தில் இருக்கும் ஒரிசாவின் முதலமைச்சர், சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த சிங் தியோ என்பவராவார்.

காங்கிரசு சரிகிறது!

பாட்னா, டிச. 6—
பீகார் மாநிலத்தில் காங்கிரசு உறுப்பினர்கள் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துவிட்டது!

கடந்த ஆண்டு 20 இலட்சம் உறுப்பினர்கள் காங்கிரசுக் கட்சியில் இருந்தார்கள்; இந்த ஆண்டில் 50 ஆயிரம் உறுப்பினர்கள்கூடச் சேரவில்லை!

தொழில் நகரமான ஜாம்ஷெட்பூரில் 1065-ல் இலட்சம் காங்கிரசு உறுப்பினர்கள் இருந்தார்கள்; இந்த ஆண்டில் 30 ஆயிரம் உறுப்பினர்கள் மட்டுமே சேருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது!

காங்கிரசுக் கட்சியில் உறுப்பினர்கள் தொகை குறைந்ததற்கு இரு காரணங்கள் காணப்படுகின்றன; போலி உறுப்பினர்கள் அகற்றப்பட்டது ஒரு காரணம்; கடந்த பொதுத்தேர்தலில் காங்கிரசு சரிந்தது இரண்டாவது காரணமாகும்.

மாணவர்களின் இந்தி எதிர்ப்பு

பெங்களூர், டிச. 5—
வருகிற மார்ச்சுத் திங்களில் நடைபெறவிருக்கும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் இந்தி கட்டாயமாக ஆக்கப்பட்டிருப்பதை எதிர்த்து, இன்று பகவன்குடி, சாமராஜ்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நெற்பயிரை தாக்கும் புதுவகை நோய்

தடுத்து நிறுத்த தமிழக அரசின் நடவடிக்கை

விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி வேண்டுகோள்

தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள், நெற்பயிருக்கு ஏற்பட்டுள்ள ஒருவித புதிய நோயை நேரில் கண்டறிந்து, நிலைமையை விவசாயிகளுக்கு விளக்கும்வகையில் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்; அந்த அறிக்கையில் அவர் தெரிவித்திருப்பதாவது :—

"நான் 1—12—67 அன்று தென் ஆற்காடு மாவட்டத்தில் சிதம்பரம் தாலுக்கா குமராட்சி, கீரப்பாளையம், காட்டுமன்னார் குடி மற்றும் சில பகுதிகளில், துணை வேளாண்மை இயக்குநர்—சிதம்பரம் கோட்டாட்சித் தலைவர்—பல்கலைக் கழக நிபுணர்கள் ஆகியோருடனும், தஞ்சை மாவட்டத்தில், மாவட்ட ஆட்சியாளர்—கூட்டு வேளாண்மை இயக்குநர்—மற்றும் பல அலுவலர்கள் – நிபுணர்களுடன் சீர்காழி, மாயவரம், கும்பகோணம், தஞ்சாவூர் தாலுக்காப் பகுதிகளிலும் நெற்பயிர்களைப் பார்வையிட்டேன்.

குறிப்பாக சமீபத்தில் தீவிரமாக நெற்பயிரைத் தாக்கி வரும் 'பாக்டீரியல் பிளைட்' என்னும் நோய் தாக்கிய பயிர்களை நேரில் கண்டேன். இந்தப் புதுவகை நோய், தற்போது சம்பாப் பயிரில் கோ–25, கோ–19 போன்றவைகளையும், தாளடியில் கோ–25, கோ–52, பி. இ. பி. 1 முதலியவைகளையும், ஊடு பயிரில் ஒட்டடன் வகைகளையும் ஆங்காங்கு தாக்கியுள்ளது.

சுமார் 1,000 ஏக்கருக்கு மேல் இந்நோய் பரவி இருக்கலாம் என்று தெரிகிறது. இந்நோய் குறுவைப் பயிரிலும் தாக்கி இருந்தது.

தமிழ் நாட்டில் இந்நோய், இரண்டொரு ஆண்டுகளாக முதன் முறையாகக் காணப்படுகிறது.

தைச்சுங்நேடிவ்-1, ஐ. ஆர். 8 போன்ற வெளிநாட்டு வகைகளுடன் இந்நோய் குடியிருந்ததாகத் தெரிகிறது. அவைகள் மூலம் தமிழ்நாட்டில் பயிரிடப்படும் வகைகளுக்கும் இந்நோய் பரவி இருக்கக்கூடும் எனவும் தெரியவருகிறது.

இந்நோய்க்குத் தக்க — நிச்சயமான நிவாரணம் இல்லை. அண்ணாமலைப் பல்கலைக் கழக நிபுணர்கள் இந்நோயைத் தடுக்கும் முறைகளைக் கையாண்டு வருவதுடன், இது அதிகம் பரவாமல் இருப்பதற்கு வேண்டிய முயற்சிகளையும் செய்துவருகிறார்கள். ஆனால், நோய் அதிகம் பரவாமலிருப்பதற்கு விவசாயிகள், நோயினால் பாதிக்கப்பட்ட பயிரிலிருந்து எடுக்கும் விதைகளைப் பயன்படுத்தாமலிருக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏனைய விதைகளையும்—விதைப்பதற்குமுன்—விவசாய இலாகாவின் ஆலோசனையின் பேரில் தக்க தடுப்பு முறைகளை மேற்கொண்டு நாற்றுப் பாவ வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன்.

எச்சரிக்கையாக, 'ஸ்ரேப்டோசைகிளின்' மருந்து, விவசாய டிப்போக்களில் இருப்பு வைக்கப்பட்டிருக்கிறது; அதைப் பயன்படுத்துமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்நோய், வடிகால் வசதி குறைவான நிலங்களில் அதிகமாகக் காணப்படுகிறது. தண்ணீர்மூலமாகவும், காற்றுமூலமாகவும், விதைமூலமாகவும் பரவுகிறது.

வட்டார வளர்ச்சி அதிகாரிகளும் அவர்களுடன் பணியாற்றும் விவசாயப் பிரிவு அலுவலர்களும், கிராமநல ஊழியர்களும், இந்நோய் தாக்கப்பட்டிருந்தால் தகுந்த நடவடிக்கை அவ்வப்போது எடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

பாக்டீரியல் பிளைட்' என்ற வியாதிக்கு மூலகாரணம், ஐ. ஆர். 8, டி. என். 1 போன்ற வெளிநாடுகளிலிருந்து கொணரப்பட்ட வித்துக்கள் என்று கருதப்படுவதால், அந்தவகை நெற்பயிர் பயிர்களைப் பயிரிடுவதில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

எதிர்காலத்தில் இது, மற்ற பயிர்களையும் பாதிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதாகக் கருதுவதால், ஆராய்ச்சியாளர்கள், மற்றும் உயர்தர விவசாய இலாகா அதிகாரிகள் உயர்மட்ட அளவில் கூடி விவாதித்து, ஐ.ஆர். 8, டி.என். 1 போன்ற உயர் ரக விளைச்சல் தரும் வித்துக்களைத் தொடர்ந்து பயன்படுத்தலாமா வேண்டாமா என்பது பற்றி விரைவில் அரசு முடிவு செய்யும்.

இந்த நோய், நெற்பயிரை சில இடங்களில் — குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் தாக்கியிருந்தாலும், இன்றைய நிலை அஞ்சத்தக்க அளவுக்கு இல்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்."

அணுப் போர் தவிர்க்க இயலாதது!

பட்டினிச் சாவு பெரும் பிரச்சினையாகிவிடும்

ஆஸ்திரேலிய விஞ்ஞானி கருத்து

கான்பெரா, டிச. 5—

"பயங்கர அணுப் போர்களையும், பெரும் அளவிலான பட்டினிச் சாவுகளையும் மனித குலத்தால் தடுத்து நிறுத்த முடியாது"

என்று, ஆஸ்திரேலிய விஞ்ஞானியான சர் மக்பார்லேன் பர்னெட், உயிரியலாரின் கருத்தரங்கில் பேசுகையில் கூறினார்.

"அந்த விபரீதங்களைத் தடுப்பதற்கான வாய்ப்புகள் குறைவு; அவ்விதமான விபரீதங்கள் ஏற்படும்போது அவற்றை எப்படிச் சமாளிப்பது என்பதில்தான் உலகம் ஈடுபட முடியும்" என்றார் அவர்.

"பிற சமூகங்கள்மீது வெறுப்பையும், அவற்றுக்கு அச்சத்தையும் வளர்க்கவும், அரசியல் அதிகாரத்தை ஏற்படுத்திக்கொள்ளவும் மனிதனின் அடிப்படை இயல்புகள்—மரபுகள், ஊக்கத் தூண்டுதல்கள் ஆகியவற்றை நாசூக்காகப் பயன்படுத்திக்கொள்வதற்கான வழிமுறைகள் பெருகிவிட்டதால், அணுப் போர்களைத் தடுப்பதற்கான வாய்ப்புக் குறைவாகத்தான் உள்ளது" என்றார் அவர்.

பெரும் அளவிலான பட்டினிச் சாவு பற்றி சர் ஒட்டோ பிராங்கெல் பேசுகையில், "2,000-ம் ஆண்டுவாக்கில் உலகின் மக்கட் தொகைக்குப் போதுமான ஊட்டத்தை அளிப்பதானால், உலக உணவு உற்பத்தி இப்போதுள்ளதைவிட இரண்டு மடங்கு அதிகரிக்க வேண்டும்" என்றார்.

"பசியையும், பிணியையும் ஒழிக்கும் நெடுங்கால இலட்சியத்தை, மனிதன், வரலாற்றில் என்றுமில்லாதவகையில் நெருங்கிவிட்டான்; எனினும் அது முந்தைய எந்தத் தலைமுறையும் கண்டிராத கடினமான—சிக்கலான பிரச்சினைகளை உண்டாக்கியுள்ளது" என்றும் அவர் சொன்னார்.

(3-ம் பத்தி தொடர்ச்சி)

வது, கணநேரத்திற்கு வேண்டுமானாலும் பொழுதுபோக்காக இருக்கலாம்; ஆனாலும் அதனால் எவ்விதப் பயனும் விளையப்போவதில்லை.

"நீங்கள் இப்படியே, தொடர்ந்து தெளிவற்ற நாகரி எழுத்துக்களில் எழுதிவருவீர்களேயானால், நானும் உங்களுக்குத் தமிழில்: எழுதத் தொடங்கவேண்டியிருக்கும்."

'நோ வோஸ்தி'!

கை பட்டால் மட்டுமே சுவைக்கக்கூடிய பண்டங்களும் உண்டு கரம் படாமல் எடுத்துச் சாப்பிட்டு ருசிக்கவேண்டிய உணவுப் பொருள்களும் இருக்கின்றன!

'செய்தி'களும்—அவற்றை ஒட்டியவைகளும் இரண்டாவது வகையைத் சார்ந்தவை. கூடுமானவரையில் அரசினர் கரங்கள் படாமல் இருந்தால்தான், 'செய்தி' இனிக்கும் அல்லது உண்மைச் சுவை இருக்கும்!

நேற்றும் அதற்கு முன்னரும் மக்களவையிலும், பத்திரிகை உலகிலும் கடும் எதிர்ப்புக்கு ஆளாகியிருக்கிறது — இந்திய அரசினர் இரஷ்யாவுடன் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ஒரு செய்தித் துறை ஒப்பந்தம்!

சரியாகக் குறிப்பிடுவதென்றால், இந்திய அமைச்சரவைகூட அல்ல—வெளிவிவகார இலாகா கூட அல்ல—அல்லது செய்தித் துறை அமைச்சர்கூட அல்ல—செய்தி இலாகாவின் உயர் அதிகாரி ஒருவர், நாடு முழுமையினையும் -- உலக அளவில் பாதிக்கும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறார்!

பி. ஐ. பி. என்னும் மத்திய பத்திரிகைத் தகவல் துறை அமைப்பும்—சோவியத் செய்தி நிறுவனமான ஏ. பி. என். என்னும் 'நோ வோஸ்தி'யும், நடப்புச் செய்திகள்—விளக்கக் கட்டுரைகள்—பின்னணித் தகவல்கள்—புகைப் படங்கள் ஆகியவற்றினைப் பரிமாறிக்கொள்வதற்கான ஓர் ஒப்பந்தத்தில் ஈடுபட்டிருக்கின்றன!

பலத்த எதிர்ப்புக்கு ஆளாகி இருக்கும் இந்த ஒப்பந்தத்துக்கு அமைச்சர் அளித்துள்ள 'வார்த்தை ஜால' விளக்கப்படி—நமது 'பத்திரிகைத்துறை தகவல் நிலையம்', 'நோ வோஸ்தி' தரும் செய்திகளைப் பிரசுரத்துக்கு வழங்கவேண்டும் என்ற கட்டாயமில்லையாம்; ஆனால், பி. ஐ. பி. தரும் செய்திகளை அந்த நிறுவனம் இரஷ்ய மொழியில் 500-க்கு மேற்பட்ட இதழ்களுக்கு வழங்கவேண்டிய கட்டாயம் இருக்கிறதாம்!

கம்யூனிஸ்டு உறுப்பினர்களைத் தவிர எல்லாக் கட்சி உறுப்பினர்களும் இதை எதிர்த்திருக்கின்றனர்! காங்கிரசு உறுப்பினர்கள், கட்சிக் கட்டுப்பாட்டின் காரணமாகவோ என்னவோ—'கடும் அமைதி'யைக் காட்டியிருக்கின்றனர்!

1968-ம் ஆண்டில் இந்திய வானொலித் துறையினர், அமெரிக்க வானொலித் துறையினருடன் மேற்கொள்ள இருந்த ஒரு கூட்டு ஒலிபரப்பு ஏற்பாடு—எப்படிப்பட்ட எதிர்ப்புக்கு ஆளானதோ—அதே எதிர்ப்பு இந்த ஒப்பந்தத்துக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது!

தனியார் செய்தி நிறுவனங்கள் தரும் தகவல்கள் கூடத் திருப்தியளிக்காத நிலையில், வசதி படைத்த பத்திரிகைகள் பிரத்தியேகமாகச் சொந்த நிருபர்களை அமைத்து செய்தி திரட்டும் காலம் இது!

இந்த நிலையில், பத்திரிகைச் சுதந்தரம்—கருத்துச் சுதந்தரம் இரண்டும் கட்டுப்பாடுகளுடன் இருக்கும் கம்யூனிச நாட்டின் அரசினரின் செய்தி நிறுவனத்துடன் நமது தகவல் துறை அமைப்பு ஏற்படுத்திக் கொண்டிருக்கும் தொடர்பு, பொருத்தமில்லாதது மட்டுமல்ல—வேண்டாததும்கூட!

பி. ஐ. பி., இந்தியாவில் அரசினரின் ஒரு நிறுவனம்; அதுபோல், 'நோ வோஸ்தி', சோவியத் யூனியனின் அதிகாரபூர்வமான அமைப்பு!

'பி. ஐ. பி. தருவதுதான் உண்மை நிலை' என்று சோவியத் மக்கள் கட்டாயப்படுத்தப்பட்டு நம்பவைக்கப்படும் நிலைமை அங்கு இருக்கலாம்!

ஆனால், 'நோ வோஸ்தி' தருவதுதான் உண்மைச் செய்தி என்று ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம், இந்தியாவில் இல்லை—இருக்கவும் முடியாது!

இப்படி, பத்திரிகைச் சுதந்தரத்தில் நேர்மாறான நிலையுடைய இரண்டு நாடுகளின் அதிகாரபூர்வமான அமைப்புகள் ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தத்தில், என்ன கூடுதலான பொது நன்மை விளைந்துவிடப் போகிறது?

குருடனும் செவிடனும் கூத்துப் பார்க்கப் போன கதைதான்!

சோவியத் நிலைமைகளை நம்மால் நேரில் அறிய முடியவில்லை என்பதற்காக, 'நோ வோஸ்தி' சொல்லுவதையெல்லாம் நாம் நம்ப வேண்டுமா?

அல்லது, 'பி. ஐ. பி. தரும் செய்திகள்தான் இந்தியாவின் பத்திரிகை உலகம்' என்று சோவியத் மக்கள் எண்ண வேண்டுமா?

'கண்ணால் பார்க்க முடியவில்லை' என்பதற்காக—செவிடன் கூறுவதையெல்லாம் நம்பித் திரவேண்டிய நிலை—கூத்துப் பார்க்க வந்த குருடனுக்கு!

'காதுகளால் சரிவர கேட்க முடியவில்லையே' என்பதற்காக—குருடன் கேட்டுச் சொல்வதையெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை செவிடனுக்கு!

'பி. ஐ. பி.'—'நோ வோஸ்தி' ஒப்பந்தம் இந்தக் கதையில்தான் சென்று முடியும்!

ஆயிரமாயிரம் மலர்கள் பூத்துக் குலுங்கவேண்டிய இடம் பத்திரிகை உலகம்! இதில், தோன்றும் அரசின் ஒப்பந்தங்கள் எதுவும் செயற்கை எழிலாகத்தான் இருக்க முடியும்!

—எஸ். ஆர்.

காந்தியாரையே இடித்துரைத்தவர் இராஜாஜி

ஒரு பழைய நிகழ்ச்சி-- புதிய தகவல்

இராஜாஜியை எதிர்க்கும் சிலர், அவர், மாமாங்க காலத்திற்கு முன்பு, 'இந்தி சுய போதினி' என்ற நூலுக்கு எழுதியிருந்த முன்னுரை ஒன்றை அடிக்கடிச் சுட்டிக்காட்டுகிறார்கள்; அவர்களுடைய பார்வைக்காகக் கீழ்க்கண்ட பகுதி தரப்படுகிறது :—

[காந்தியடிகளிடமிருந்து தேவநாகரி (இந்தி) எழுத்தில் அவசர அவசரமாகக் கிறுக்கி எழுதப்பட்டுவந்த கடிதம் ஒன்றிற்கு, இராஜாஜி அவர்கள் அனுப்பியிருந்த இந்தப் பதில் கடிதம், காந்தியாரைப் பற்றி அவருடன் மிக நெருங்கிப் பழகிவந்த பியாரே லால் என்பவர் எழுதிய 'கடைசிக் கட்டம்' என்ற நூலில் காணப்படுகிறது.]

"நீங்கள் கொஞ்சம்கூடத் தெளிவில்லாமல், நாகரி எழுத்தில் எழுதியிருந்ததால், மிகவும் சிரமப்பட்ட பிறகே, நீங்கள் என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது....

"நம் இருவருக்கும் நன்கு தெரிந்ததும், நாம் இருவரும் நன்கு பயன்படுத்திவருவதுமான ஒரு சாதனத்தை (ஆங்கிலத்தை)ப் புறக்கணித்துவிட்டு, வேண்டுமென்றே இன்னொரு கடினமான சாதனத்தை நீங்கள் பயன்படுத்து

(2-ம் பத்தி பார்க்க)

சோடா புட்டிகள் வீச்சு---

சில சுவையான தகவல்கள்!

கூட்டங்களில் —ஊர்வலங்களில் நிகழும் கலவரங்களில், சமூக விரோதிகளுக்கு —வன்முறையாளர்களுக்கு முதலில் கிடைக்கும் ஆயுதம், சோடா புட்டிகள்தான்!

அண்மையில் கல்கத்தாவில் நடந்த கலவரங்களின்போது, 7,000 சோடா புட்டிகள் வீணாகியிருக்கின்றன!

இதனால் உற்பத்தியாளர்கள், சுமார் ரூ. 1,00,000 நட்டமடைந்திருக்கின்றனர்!

முன்பெல்லாம் வன்முறை நிகழ்ச்சிகளுக்கு இரையாகும் சோடா புட்டிகளின் உடைசல்களுக்குப் பெட்டிக் கடைக்காரர்கள் பொறுப்பேற்க வேண்டியதில்லை; சோடா உற்பத்தியாளர்களே நட்டத்தை ஏற்றுக்கொண்டுவந்தனர்!

ஆனால், கலவரங்கள் அன்றாட நிகழ்ச்சிகளாகி — அதில் சோடா புட்டிகள் வீச்சுகளும் வாடிக்கையாகி விட்டபடியால், உடைந்த புட்டிகளுக்கான நட்டத்தை உற்பத்தியாளர்கள் இப்போது கடைக்காரர்களிடமே வசூல் செய்கிறார்கள்!

எப்போதுமே இந்தப் பாதகத்திலிருந்து நிரந்தரப் பாதுகாப்புப் பெற வேண்டுமென்பதற்காக, கல்கத்தாவில் உள்ள இரண்டு சோடா உற்பத்தியாளர்கள்—சோடா நீரை கண்ணாடி அல்லாத புட்டிகளில் அடைத்து வியாபாரம் செய்ய எண்ணியிருக்கின்றனர்!

இந்த முயற்சியை வரவேற்றிருப்பதுடன், திருப்தியளிக்கும் வகையில் பாராட்டியுமிருக்கிறார் கல்கத்தா நகர போலீசுக் கமிஷனர்!

கணவன்-மனைவி

கருத்தொருமித்த பேச்சு!

ஆச்சாரிய கிருபளானி—அவரது துணைவியார் சுசேதா கிருபளானி ஆகிய இருவரது கருத்தும் ஒன்றுபட்ட காட்சியினை நேற்றைய மக்களவைக் கூட்டம் கண்டது!

"மேற்கு வங்காள விவகாரத்தில் கவர்னர் எடுத்த முடிவு சரியானதே" என்று ஆச்சாரிய கிருபளானி பேசினார்.

அவரைத் தொடர்ந்து பேசிய சுசேதா கிருபளானியும், அதே கருத்தை வலியுறுத்திப் பேசியிருக்கிறார்.

ஆச்சாரிய கிருபளானி, இதுவரையில் எதிர்க்கட்சி உறுப்பினராகவே இருந்து—இந்த மக்களவை கூட்டம் துவங்கியதுமுதல் சுயேச்சை உறுப்பினராக இருந்து வருகிறார்; ஆனால் காங்கிரசுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதில் முதல்வராக இருக்கிறார்.

அவரது துணைவியார் சுசேதா கிருபளானி, உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த காங்கிரசு உறுப்பினர்!

‘இந்தியாவிலேயே தலைசிறந்த அறிவாளி அண்ணா’

‘எதிர்காலத்தில் மத்திய அரசையே நிர்வகிக்கும் ஆற்றல் பெற்றவர்’

நமது சட்டமன்ற உறுப்பினரிடம் ஜப்பானியத் தூதுவர் கருத்துரை

“இந்தியாவிலேயே நான் பார்த்த வரையில் மிகச் சிறந்த புத்திகூர்மையுள்ள அரசியல்வாதிகளில் ஒருவர் தமிழகத்தின் முதல்வர் திரு. அண்ணாதுரை அவர்கள் ஆவார்கள்”

என்று இந்தியாவில் ஜப்பானிய கான்சல்-ஜெனரலாக உள்ள திரு. காஷிஹிகோ சிக்கோவா கூறினர்.

29—11—67 காலை 11-30 மணியளவில், கழகச் சட்டமன்ற உறுப்பினர் திருச்சி ஆர். நாகசுந்தரம், ஜப்பானியத் தூதர் காஷிஹிகோ சிக்கோவாவைச் சந்தித்து, அவரோடு ஐம்பது நிமிட நேரம் பேசிக் கொண்டிருந்தபோதே இவ்விதம் கூறினராம்.

“அவர், தமிழக அரசையும், அறிஞர் அண்ணாவையும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் பற்றி மிக நன்றாக துல்லியமாகத் தெரிந்துவைத்துள்ளார்” என்று திரு. நாகசுந்தரம் தெரிவிக்கிறார்.

1967 சனவரியில் சென்னையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகச் சிறப்பு மாநாட்டுக்குத் தாம் வந்திருந்ததாகவும், அங்கு கூடியிருந்த இலட்சோபலட்சம் மக்களைப் பார்த்தபோதே, தாம் ‘தி.மு. கழகம்தான் ஆட்சியைக் கைப்பற்றும்’ எனத் தாம் நினைத்ததாகவும் திரு. சிக்கோவா கூறினர்.

“நான் பார்த்தவரையில் இந்தியாவிலேயே மிகச் சிறந்த புத்திகூர்மையுள்ள அரசியல்வாதிகளில் ஒருவர் ஆவார்; தமிழ்நாடு ஒன்றுதான் இந்தியாவிலேயே திறமையாக நிர்வகிக்கப்படுகிறது. இந்தியாவிலேயே நிலையான—நிச்சயமான ஆட்சி இங்குதான் நடைபெறுகிறது; இந்தியாவின் அடுத்த தலைமைக்கு—மத்திய அரசை நிர்வகிப்பதற்கு ஏற்றவர் தமிழகத்தின் ‘முடிசூடா மன்னர்’ அறிஞர் அண்ணாதான் என்று பலர் என்னிடம் கூறியிருக்கின்றனர்” என்று திரு. சிக்கோவா கூறினராம்.

தி.மு.க. ஆட்சியின் குறுகிய காலத்தின மிகப் பெரிய சாதனைகளை அவர் பாராட்டினர்; தாமும் தீவிபத்து நிவாரண நிதிக்கு ரூ. 750-ஐ முதலமைச்சரிடம் தந்ததாகவும் தென் சென்னை வெற்றி தி.மு. கழக அரசின் கொள்கைகளை மக்கள் முழுமையாக ஆதரிக்கின்றனர்கள் என்பதனைக் காட்டுகிறது என்றும் அவர் கூறினர்.

மேலும், தற்கால—மிகச் சாதாரண பிரச்சினையிலிருந்து பெரிய பிரச்சினைகள் வரையில் நன்கு தெரிந்து வைத்துள்ள அவர், ‘தமது நல்லெண்ணம தமிழக மக்களுக்கு எப்போதும் உண்டு’ என்றும் நாகசுந்தரத்திடம் கூறினராம்.

கம்பாலாக்குன்றில் தென் சென்னை வெற்றி விழா

தென் சென்னை நாடாளுமன்ற தேர்தலில் முரசொலி மாறன் வெற்றி பெற்றதைக் கொண்டாடும் வகையில் பம்பாய்—கம்பலாக் குன்று எம். ஜி. ஆர். மன்றத்தின் சார்பில் 17—11—67 அன்று தோழர் இரா. கருணாநிதி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

முரசொலி மாறனையும் கழக வெற்றிக்காக உழைத்த சென்னை மாவட்டத் தோழர்கள்—அமைச்சர்கள்—கலைஞர்கள்—பிற மாவட்டத் தோழர்கள் ஆகியோரையும் பாராட்டி மத்தியக் குழுத் துணைச் செயலாளர் சி. நா. சிதம்பரன், ச. சொ. சங்கர், நா. பா. அரங்கண்ணல், அ. மாசானம் உள்ளிட்ட தோழர்கள் பலர் பேசினர். செயலாளர் எஸ். கப்பல் சுப்பையா நன்றி கூறினர்.

கூட்டத்தில் இனிப்புகளை கம்பாலாக்குன்று கிளைச் செயலாளர் ச. சொ. சங்கர் வழங்கினர்.

தமிழைப் பயிற்றுமொழியாக்க படிப்படியான நடவடிக்கை

கல்லூரி முதல்வர்கள்--பேராசிரியர்களைக் கூட்டி ஆலோசிக்க ஏற்பாடு

கோவை தமிழாசிரியர்கள் மாநாட்டில் கல்வியமைச்சர் விளக்கம்

கோவை, டிச. 3—

“கல்லூரிகளில் தமிழையே பயிற்றுமொழியாக்குவதுதான் தமிழக அரசின் உறுதியான கொள்கையாகும்; ஆனால், உலகின் மற்றப் பகுதிகளில் உள்ளவர்களுடன் ஒப்பிடும்போது, பொது அறிவு வளர்ச்சியில் நமது மாணவர்கள் பாதிக்கப்படாதிருக்கும் வகையில் பயிற்று மொழி மாறுதலைப் படிப்படியாகவும், நிதானமாகவும் செய்வோம். அவசரப்பட்டுக் காரியங்களைச் செய்தல் கூடாது”

என்று, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இங்கு தெரிவித்தார்.

கோவை மாவட்டத் தமிழாசிரியர்கள் மாநாட்டில் அமைச்சர் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது :—

“புகுமுக வகுப்புகளில் தமிழையே பயிற்று மொழியாக ஆக்குவது பற்றி விவாதிக்க விரைவில் கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்களின் மாநாட்டைக் கூட்ட ஏற்பாடு செய்திருக்கிறேன்.

“வருகிற கல்வி ஆண்டிலிருந்தே வரலாறு, தரை நூல் போன்ற அறிவியல் துறையல்லாத பாடங்களில் (ஹருமானிட்டிஸ்) தமிழையே பயிற்று மொழியாக்குவதற்கு ஆதரவாக மாநாட்டில் கருத்து ஒற்றுமை ஏற்பட்டால் அந்த முடிவைச் செயல்படுத்தத் தயங்க மாட்டேன்.

“தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு பட்டம் பெற்றவர்களுக்கு அரசு ஊழியர் தேர்வுக் குழுவிடம் கலந்து, போதுமான வேலை வாய்ப்புக்களை அளிப்பது பற்றி அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

“நிர்வாகத்தின் எல்லாத் துறைகளிலும் தமிழைப் படிப்படியாகச் செயல்படுத்தும் பொருட்டு தமிழ் வளர்ச்சிப் பிரிவு ஒன்றையும் அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

“ஆங்கிலத்தைத் தமிழகம் புறக்கணிக்க முடியாது; எனவே பள்ளிக்கூடங்களில் மூன்றுவது வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தைக் கற்பிக்க அரசு முடிவு செய்திருக்கிறது.’

இந்த மாநாட்டை, சுகாதார அமைச்சர் திரு. சாதிக் பாட்சா துவக்கிவைத்தார்.

பேராசிரியர் சி. இலக்குவனார் மாநாட்டுக்குத் தலைமைவகித்தார்.

முன்னாள் தமிழகக் கல்வியமைச்சர் திரு. டி. எஸ். அவினாசிலிங்கம் அவர்களும் மாநாட்டில் கலந்து கொண்டார்.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும் மாநாட்டிற்கு வந்திருந்தார்கள்.

ஆண்டிமடம் தொகுதி மக்களின் குறைகள்

நேரில் சென்று கேட்டறிந்தார் சட்டமன்ற உறுப்பினர்

ஆண்டிமடம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு கே. என். இராமச்சந்திரன், நவ. 21, 22 ஆகிய நாட்களில் மாத்தூர், மாராக்குறிச்சி இருங்கலக்குறிச்சி, செங்கமேடு, தளவாய், சேந்தமங்கலம், ஈச்சங்காடு, சிலுப்பனூர் ஆகிய ஊர்களுக்குக் கால்நடையாகவும், சைக்கிளிலும் சென்று தொகுதியினுடைய குறைபாடுகளை விசாரித்துவந்தார்.

பொதுமக்கள் திரளாக வந்து, பாசனத்திற்குரிய ஏரிகளையும், வெள்ளாற்று நீர்த்தேக்கம் பற்றிய நீர்த் திட்டத்தையும் மனுக்கள் மூலமும், நேரிலும் சொன்னார்கள்.

எல்லாப் பள்ளிகளையும் பார்வையிட்டு குறைகளை விசாரித்து வந்தார்.

அவருடன் மாவட்டப் பிரதிநிதி மு. இராகவனும், கிளைக் கழகச் செயலாளர்களும் சென்றிருந்தனர்.

தொடர்ந்து எல்லா கிராமங்களுக்கும் சென்றுவருவார்.

ஆலைக் கூட்டுறவுப் பண்டகசாலைத்தேர்தல்

27—11—67 அன்று கோவை சி. எஸ். அண்டு டபிள்யூ. ஆலையில் நடைபெற்ற கூட்டுறவுப் பண்டகசாலைத் தேர்தலில், கீழ்க்கண்டவர்கள் வெற்றிபெற்றனர்கள் :—

கே. வெங்கிடபதி (ஸ்டாப்);
எஸ். தேவராசு (தி. மு. க.);
கே. கந்தசாமி (தமிழ்நாடு);
என். அருணாசலம் (வலது);

எதிர்த்து நின்ற இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் தோல்வியடைந்தனர்.

இந்தப் பண்டகசாலையில் கடந்த 20 ஆண்டுகளாக இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் தொடர்ந்து வெற்றிபெற்றிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது.

ஆம்பூர் சர்க்கரை ஆலை

புதிய நிர்வாகிகள் நியமனம்

வடாற்காடு மாவட்டம் ஆம்பூர் சர்க்கரை ஆலைக்குப் புதிய நிர்வாகி குழுவினர்களாக (Dircetors) தமிழக அரசு கீழ்க்கண்டவர்களை நியமித்துள்ளது :—

தலைவர் : எம். பி. வடிவேலு; துணைத் தலைவர் : டாக்டர் இராமசாமி; இயக்குநர் : ஆர். சம்பங்கி; நிர்வாகிகள் : பி. கே. முனுசாமி, திம்மராயன் எம்.எல்.ஏ., ஜி. நடராசன் எம்.எல்.ஏ., தோப்பூர் திருவேங்கடம், ஜான் (விவசாயப் பண்ணை), அப்துல் வகாப்.

கோவையில் உணவு அமைச்சருக்கு பாராட்டு

மேலை நாடு சென்று திரும்பிய உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்களுக்கு 10—12—67 அன்று கோவை நகரில் மாபெரும் பாராட்டுப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

அமைச்சர் திரு. சாதிக் பாட்சா மற்றும் சட்டமன்ற—பாராளுமன்ற உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டச் செயலாளர்கள் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

‘தமிழ்ப் பண்பைக் குலைக்கும் தரங்கெட்ட எழுத்தாளர்கள்’

‘எச்சரித்தும் திருந்தவிட்டால் வெளியேற்றுக’

தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்கு அமைச்சர் கருணாநிதி யோசனை

சென்னை, டிச. 5—

“எழுத்தாளர்களிடை கருத்து வேறுபாடுகள் இருக்கலாம்; ஆனால், அந்தக் கருத்து வேறுபாடுகள் வெறும் கருத்துப் போராட்டமாக இராமல் வெறுப்புப் போராட்டமாக மாறும் போது, தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ் மொழியின் உயர்வையும் அது கெடுத்துவிடுகிறது.

“கலைத்துறையில் பண்பாட்டுடன் பணியாற்றும் சில எழுத்தாளர்கள் அரசியல் பற்றி எழுதப் புகும்போது, தரங்குறைந்து நாராச நடையைப் பின்பற்றுகிறார்கள். அப்படித் தரக்குறைவாக எழுதுபவர்களை, எழுத்தாளர் சங்கம் தாய் – தந்தைபோல் எச்சரிக்க வேண்டும்; அந்த எச்சரிக்கைகளையும் மீறி அவர்கள் நடந்துகொண்டால், ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அவர்களை சங்கத்திலிருந்தே விலக்கி வைக்கவேண்டும்”

என்று, பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், ‘கல்கி நினைவு நாள்’ விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில்;குறிப்பிட்டார்.

‘கல்கி’ நுண்கலைக் கழகச் சார்பில் இந்த விழா மயிலை நுண்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

திருவாளர்கள் அகிலன், டி. கே. சண்முகம், எஸ். வி. சகஸ்ரநாமம், பெரியசாமிதூரன், சுகி சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர்.

அமைச்சர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ் மொழியின் மேம்பாட்டையும் குலைக்கும் எழுத்தாளர்களிடத்தில் எச்சரிக்கையாக இருந்து, நல்ல சூழ்நிலையை உருவாக்குவதே மறைந்த எழுத்தாளர் ‘கல்கி’யின் நினைவுக்கு நாம் செய்யக்கூடிய அருந்தொண்டாகும்.

“இத்தகைய கட்டுப்பாட்டைச் செயல்படுத்தாவிட்டால், இன்னும் ஐந்து அல்லது பத்தாண்டுகளில் தமிழ்நாட்டின் தெருக்களில், ‘தேமதுரத் தமிழோசை’க்குப் பதில், தரங்கெட்ட தமிழோசைதான் கேட்கும்!

“தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்கான சொந்தக் கட்டிடம் வேண்டும் எனக் கடந்த 13 ஆண்டுகளாகக் கண்டுவந்த கனவை நனவாக்கத் தமிழக அரசு ஒத்துழைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.”

யூ. ஆர். ஜீவரத்தினம் இசை நிகழ்ச்சி

‘தென்னக இசைக் குயில்’ என்ற—புகழ்பெற்ற திரைப்பட நடிகை திருமதி யூ. ஆர். ஜீவரத்தினம், ‘அண்ணாவின் ஆட்சி’ — ‘சாதனைகள்’ — ‘போதனைகள்’—‘கழகக் கொள்கைகள்’ —‘திட்டங்கள்’ — ‘தலைவர்கள் சிறப்பு’ —‘தமிழ் மொழிச் சிறப்பு’—‘முன்னேற்றம்’ ஆகியவைகளை மையமாகக் கொண்ட கருத்து நிறைந்த பாடல்களை—இனிய பண்களில், இசை அமைத்து—தனக்கே உரித்தான சிறப்பான முறையில், தென்னகம் எங்கும் இன்னிசை நிகழ்த்த முன் வந்துள்ளார்.

தொடர்புகொள்ளும் முகவரி :—

யூ. ஆர். ஜீவரத்தினம்
31, போயஸ் சாலை,
தேனாம்பேட்டை,
சென்னை-18

திருமணம்

திருவாரூர் நகர தி. மு. கழகப் பொருளாளரும் கருணாநிதி அச்சக உரிமையாளருமான கருணை எம். ஜமால் அவர்கள் புதல்வி செல்வி நூர்ஜகான் பேகத்திற்கும், ஆதிரங்கம ஊராட்சி மன்றத் தலைவரும் நிலக்கிழாருமான திரு. ஏ.எஸ்.என். ஷேக் தாவூது அவர்கள் புதல்வர் செல்வர் இஸ்ஹாக் பி.ஈ.-க்கும் 19—11—67-ல் வாழ்க்கை ஒப்பந்தம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இதையொட்டி நடைபெற்ற வரவேற்பில் திரு. மாறன் எம்.பி., மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மாயூரம் கிட்டப்பா, விளநகர் கணேசன், பேராவூரணி கிருட்டினமூர்த்தி, சித்தமல்லி சோமசுந்தரம், முத்துப்பேட்டை தர்மலிங்கம், கே. ஆர். ஞானசம்பந்தம், மாவட்டச் செயலாளர் நாராயணசாமி ஆகியோரும், மற்றும் வெளியூர்—உள்ளூர்ப் பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மணமக்களுக்கு நிறையப் பரிசுகளும், ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் வந்திருந்தன.

தமிழக அரசு ஊழியர்கட்கு அறிவுறுத்தல்

சென்னை, டிச. 5—

“அரசு ஊழியர் யாரும் அமைச்சர்களிடம் நேரில் முறையிடவோ, அரசுக்கு முறைப்படி அனுப்பும் கோரிக்கைகளின் நகல்களை முன்னதாகவோ, அமைச்சர்கட்கு அனுப்பவோ கூடாது” என்று, 1960-ம் ஆண்டு தமிழக அரசு ஊழியர்களின் ஒழுங்கு நடத்தை விதிமுறைகளுக்கான விதி கூறுகிறது.

அரசு ஊழியர்கள் தங்கள் வேலை சம்பந்தமாக தமது கோரிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக எந்த மேலதிகாரி மீதும் அரசியல் அல்லது வெளியார் செல்வாக்கைக் கொண்டுவருவதைத் தமிழக அரசு ஊழியர்களின் ஒழுங்கு—நடத்தை விதிமுறைகளின் 18-வது விதி தடை செய்கிறது.

எனினும் அரசு ஊழியர்கள், வேலை மாற்றம் பெறுவது அல்லது வேலை மாற்றத்தைத் தவிர்ப்பது போன்ற காரியங்களைச் சாதித்துக்கொள்வதற்காக அமைச்சர்களிடம் சிபாரிசு கொண்டுவரும் சில நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன.

இம்மாதிரிச் செயல், விதி முறைகளுக்கு முரணாவதுடன், அரசு ஊழியர்களின் ஒழுக்கத்தையே சீர்குலைப்பதாகும். இந்த வழக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று அரசு கருதுகிறது.

அரசு ஊழியர்கட்குக் குறைகள் இருக்கக்கூடிய எல்லா விஷயங்களிலும், அடுத்துள்ள மேலதிகாரிகள் மூலம் உரிய அதிகாரிகட்கு எழுத்து மூலம் முறையிடு செய்துகொள்ளலாம்.

அமைச்சர்களுக்கோ அல்லது மேலதிகாரிகளுக்கோ சிபாரிசுகள் கொண்டுவருவது, ஒழுங்கு விதி முறைகளை மீறுவதாகும் என்பதை அரசு வலியுறுத்த விரும்புகிறது.

எதிர்காலத்தில் இப்படி மீறப்படும் சந்தர்ப்பங்களில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று எல்லாத் துறைகளின் தலைவர்களுக்கும் அவர்களது சார்நிலைத் துறையினருக்கும் அரசு தெரிவிக்கிறது.

சங்கரி இடைத் தேர்தல்

கழக வேட்பாளரை ஆதரித்து தீவிரப் பிரசாரம்

சங்கரி, டிச. 5—

தமிழகச் சட்டமன்றத்திற்கான சங்கரி தொகுதி இடைத் தேர்தல், இத்திங்கள் 20-ஆம் நாள் நடைபெறுவதையொட்டி, தி. மு. கழகப் பிரசாரப் பணிகள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன.

தேர்தல் அலுவலகம் திறப்பு

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று தி. மு. க. தேர்தல் அலுவலகம் திறந்துவைக்கப்பட்டது.

திரு. செ. கந்தப்பன் தலைமையில் அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி., தேர்தல் அலுவலகத்தைத் திறந்துவைத்தார்.

சிவகங்கை சேதுராசனின் பலகுரல் கலை நிகழ்ச்சியுடன் தேர்தல் பிரசாரம் தொடங்கியது.

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன், மாவட்டச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் உள்ளிட்ட கழக முன்னணித் தோழர்கள், தேர்தல் பணியைக் கவனித்துவருகின்றனர்.

சங்கரி இடைத் தேர்தலுக்கெனத் தலைமைக் கழகம் தேர்தல் பணிக் குழு ஒன்றினை அமைத்துள்ளது. இந்தக் குழுவில், அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி., தஞ்சை மாவட்டச் செயலாளர் மன்னை நாராயணசாமி ஆகியோர் இருக்கின்றனர்.

சங்கரி இடைத் தேர்தல் பிரசாரத்துக்கென அமைச்சர்களும், கழக முன்னணிப் பேச்சாளர்களும் வந்து கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

கழக வேட்பாளர் வீரமணியின் வெற்றிக்காகக் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும், பம்பரம்போல் சுழன்று பணியாற்றிவருகின்றனர்.

வேட்பாளர் வீரமணி ஊர் ஊராகச் சென்று வாக்காளர்களைச் சந்தித்துவருகிறார்.

★

தி. மு. கழகத்துக்கு ச. சோ. கட்சி ஆதரவு

சிதம்பரம், டிச. 4—

தமிழக சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியின் செயலாளர் திருக்கோயிலூர் சுந்தரம் பின்வருமாறு அறிவிக்கிறார் :—

"சர்வாதிகாரப் பாதையை நோக்கி காங்கிரசு மத்திய அரசு வெகு வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது.

கடந்த தேர்தலில் மக்கள் அளித்த மகத்தான தீர்ப்பைக் கூடக் காங்கிரசுக் கட்சி புரிந்து கொள்ளவில்லை.

காங்கிரசு அல்லாத கட்சிகளைப் பிரிப்பதிலும், காங்கிரசு அல்லாத அமைச்சரவைகளைக் கலைப்பதிலும் முழுக் கவனத்தைச் செலுத்தி வரும் காங்கிரசுக் கட்சியை, தமிழகத்தில் இம்மாதம் 20-ம் நாளன்று சங்கரி தேர்தல் களத்தில் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும்—சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சிக்கும் சில கொள்கைகளில் உடன்பாடு இல்லை என்பது உண்மையானாலும், காங்கிரசைத் தோற்கடிக்க வேண்டியது ச. சோ. கட்சியின் தலையாய கடமையாகும்.

எனவே, சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியின் தொண்டர்களும், கிளைகளும், தி. மு. கழக வேட்பாளரின் வெற்றிக்குப் பாடுபட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். காங்கிரசு, தான் கட்டிய காப்புப் பணத்தையே இழக்க வேண்டும்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.)

தியாகராயர் கல்லூரி தமிழ் மாணவர் மன்றச் சிறப்புக் கூட்டம்

சென்னை—வண்ணை சர். தியாகராயர் கல்லூரித் தமிழ் மாணவர் மன்றச் சிறப்புக் கூட்டம், 8-12-67 மாலை 4-30 மணிக்கு, கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்; அமைச்சர் திருமதி **சத்தியவாணி முத்து**, திரு. சிலம்பொலி செல்லப்பன் எம்.ஏ., பி.டி. ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

புதுடில்லியில் தமிழக மாணவர் குழு

இந்தித் திணிப்பை எதிர்த்துத் தலைமையமைச்சரிடம் வற்புறுத்தல்

சேத் கோவிந்த தாசையும் சந்தித்தனர்

புதுடில்லி, டிச. 6—

தமிழகத்திலிருந்து இங்கு வந்த மாணவர் தூதுக் குழுவினர் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து, 'ஆட்சி மொழிப் பிரச்சினையில் தமிழகத்திற்கு நீதி வழங்க, அரசியல் சட்டத்தையே திருத்த வேண்டும்' எனக் கோரி, அதற்கான காரண காரியங்களை விளக்கினர்.

அடுத்து, இந்தி வெறியரான சேத் கோவிந்த தாசையும் அவர்கள் சந்தித்தனர்; 'தென்னாட்டவர் மீது இந்தியைத் திணிக்கக்கூடாது என்றால், எங்கள்மீது ஆங்கிலத்தைத் திணிக்கக்கூடாது' என்று சேத் கோவிந்த தாஸ், மாணவர் குழுவிடம் கூறினார்.

அதற்குப் பதிலளித்த மாணவர்கள், 'அறிவியல்—தொழில் நுட்பம்—மருத்துவம் ஆகிய துறைகளுக்கு, மேலை நாட்டு முறைகளைத் தெரிந்துகொள்ள ஆங்கிலம் இன்றியமையாததாக இருந்துவருகிறது' என எடுத்துரைத்தனர்.

தமிழ் மாணவர்களின் தாய்மொழிப் பற்றையும், அவர்கள் அன்புடனும் இனிமையாகவும் பழகிய விதத்தையும், இந்தி வெறியரான சேத் கோவிந்த தாஸ் புகழ்ந்து பாராட்டினார்.

"நாளை என்னுடன் நீங்கள் விருந்துண்ண வேண்டும்" என, சேத் கோவிந்த தாஸ், மாணவர்களை அழைத்தார்; 'நாங்கள் உடன் சென்னை திரும்பவேண்டியிருப்பதால் அழைப்பை ஏற்க இயலவில்லை' என்று மாணவர்கள் வருத்தத்துடன் தெரிவித்தனர்.

தோழர் இரா. சனார்த்தனம் தலைமையில் வந்திருந்த இக்குழுவினர், டில்லியிலிருந்து சென்னைக்குப் புறப்பட்டுவிட்டனர்.

இக்குழுவில் மற்றும் தோழர்கள் துரை முருகன், யாகியா, சாபிநாதன், பாண்டியன், சாலைகுணன், ஷீலா, ஊர்மிளா ஆகியோர் இருந்தனர்.

'நவசக்தி' ஏட்டின் மீது அரசு வழக்கு

அமைச்சர் கருணாநிதி சாட்சியமளிப்பார்

சென்னை, டிச. 6—

மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் ஆகியவற்றில் செல்வோர் பாதுகாப்புத் தொப்பி அணிய வேண்டும் என்பதைப் பரிசீலிக்கவிருப்பதாகப் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் அறிவித்ததும், அதையொட்டி, 'நவசக்தி' ஏட்டில் கட்டுரை ஒன்று தீட்டப்பட்டதும், அதன்பேரில் அந்த ஏட்டின் மீது தமிழக அரசினர் அவதூறு வழக்குத் தொடர்ந்ததும் தெரிந்ததே.

அரசு தொடுத்த இவ்வழக்கு, 7—12—67 காலை 11 மணிக்கு, சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது; அதுபோது, அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், அரசுத் தரப்பில் முதலாவதாக விசாரிக்கப்படுவார்.

இவ்வழக்கில் மேற்படி கட்டுரையை எழுதிய கண்ணதாசன்—கட்டுரை வெளியான ஏட்டின் ஆசிரியரும் அச்சிடுபவரும் வெளியிடுபவருமான தனுஷ்கோடி—கௌரவ ஆசிரியர் சம்பத் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அரசாங்கத் தரப்பில், அரசு வழக்கறிஞர் பி. ஆர். கோகுல கிருஷ்ணன் அவர்களும், மாநகர அரசு வழக்கறிஞர் இராசமாணிக்கம் அவர்களும் வாதாடுவர்.

வடக்கத்தி மாணவர்களின் இந்தி வெறியாட்டம்

ஆசிரியர் --- டாக்டர் தாக்கப்பட்டனர்; கடைகள் சூறையாடப்பட்டன

பாட்னா, டிச. 6—

பீகார் தலைநகரான பாட்னாவிலும், இந்தி வெறி மாணவர்கள் காலித்தனத்தில் இறங்கினர்!

ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதாவையும்— ஆங்கிலத்தையும் எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டு, மருத்துவர் ஒருவர் உட்பட இருவரை அவர்கள் தாக்கினர்!

லக்னோ மாணவர்களோ, ஆங்கில ஆசிரியர் ஒருவர் வீட்டையே தாக்கினர்! அங்கு மாணவர்கள், கடைகளைக் கொள்ளையடிக்கவும் செய்தனர்!

பாட்னா மாணவர்கள், போலீசு அதிகாரிகள் அணிந்துள்ள அடையாளச் சின்னத்தில் உள்ள ஐ. பி. எஸ். என்ற ஆங்கில எழுத்துக்களை, இந்தியில் மாற்றவேண்டுமெனக் கூறினர்!

இந்தி வெறியின் விளைவாக, பீகாரில் தார் சட்டிக் கட்சியும், உத்தரப் பிரதேசத்தில் 'இந்தி சேனா' 'சைனிக் இந்தி மார்ச்சா' என்ற அமைப்புக்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன!

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

8--12--67

செங்கற்பட்டு

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு தர்கா திடலில்; தலைவர் : செ. எ. பலராமன்; பேசுவோர் : அறிஞர் அண்ணா, சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ., சி. சிட்டிபாபு எம்.பி., செ, கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ., ஏ. ஆர். அன்சர் எம்.சி., வ. பசுபதி எம்.சி., சி. எம். தட்சிணாமூர்த்தி, கோ. ஆலாலசுந்தரம்.

திருப்பத்தூர் நகராட்சி

ஆண்டு விழா

வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகராட்சியின் 80-வது ஆண்டு நிறைவு விழா, டிச. 8, 9, 10 ஆகிய நாட்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர், மற்றும் அரசியல் தலைவர்கள் கலந்துகொள்ள இருககிறார்கள்; விழாவையொட்டிச் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படும்.

பாகிஸ்தானில் விமானத் தளங்கள்

தாஷ்கண்ட் ஒப்பந்தத்திற்குப்பின் ஏற்பட்டதாகத் தகவல்

புதுடில்லி, டிச. 6—

"தாஷ்கண்டு ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, பாகிஸ்தான் பல விமானத் தளங்களை அமைத்துக் கொண்டிருக்கிறது"

என்று, தலைமையமைச்சர் இந்திரா மாநிலங்களவையில் கூறினார்.

"இந்த விமானத் தளங்களைப் பற்றிய விவரங்கள் எதனையும் வெளியிடுவது பொது நலனுக்கு ஏற்றது அல்ல" எனக் கூறி, விவரங்களை வெளியிட மறுத்தார்.

ஆலை முதலாளிகள் நிர்ப்பந்தத்துக்கு அரசு பணிந்ததா?

சர்க்கரை விலையேற்றத்துக்குக் கண்டனம்

மக்களவையில் வெ. கிருஷ்ணமூர்த்தி குற்றச்சாட்டு

புதுடில்லி, டிச. 5—

"சர்க்கரை ஆலை அதிபர்களின் நிர்ப்பந்தத்தின் விளைவாகவே சர்க்கரை விலையை அரசு உயர்த்த நேர்ந்திருக்கிறது"

என, மக்களவையில், தி. மு. கழக உறுப்பினர் வெ. கிருஷ்ணமூர்த்தி குற்றஞ்சாட்டினார்.

மத்திய அரசின் புதிய சர்க்கரைக் கொள்கையைக் கடுமையாகக் கண்டித்து மக்களவையில், எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலரும் குரலெழுப்பினர்.

ஆலை அதிபர்களின் நிர்ப்பந்தத்துக்குப் பணிந்து அரசு, சர்க்கரை விலையை ஏற்றியதாகத் தோழர் கிருஷ்ணமூர்த்தி கூறிய குற்றச்சாட்டை துணையமைச்சர் திரு. ஷிண்டே மறுத்த போதிலும், எதிர்க் கட்சி உறுப்பினர்களின் கடுமையான கண்டனங்களைச் சமாளிக்க முடியாமல் திணறினார்!

"சர்க்கரை தொடர்பாக அரசு புதிய கொள்கையைப் பின்பற்றாமல் இருந்திருந்தால், நாட்டில் கடுமையான சர்க்கரைப் பஞ்சம் ஏற்பட்டிருக்கும்" என்று அவர் சமாதானம் கூறினார்.

"ஏற்கனவே கரும்புச் சாகுபடி அதிகரித்துள்ளதால், அடுத்த 8 அல்லது 10 மாதங்களில் சர்க்கரைப் பற்றுக்குறை நீங்கக்கூடிய அறிகுறி காணப்படுகிறது" என்றும் அவர் கூறினார்.

எஸ்.எஸ்.ஆர். வீட்டுத் திருமணம்

இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்களின் மைத்துனியும் திருமதி விசயகுமாரியின் தங்கையுமான செல்வி : **தனலட்சுமிக்கும்** — பாகனேரி திரு. உடையப்பா அவர்களின் மகன் செல்வன் : **இராசேந்திரனுக்கும்**, 8-12 67 காலை 9-30 மணியளவில், சென்னை-மயிலாப்பூர் இராசேசுவரி திருமண மண்டபத்தில், **அறிஞர் அண்ணா** அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்; அமைச்சர்கள், கழக முன்னணித் தோழர்கள் பலரும் வாழ்த்துரை வழங்குவர்.

திரைப்படம் எடுப்பதில் சிக்கனம் தேவை

பட அதிபர்களுக்கு அண்ணா ஆய்வுரை

"திரைப் பட உரிமையாளர்கள் இலாபமடைய வேண்டுமானால், அவர்கள், சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டும்.

"இப்போது தயாரிக்கப்படும் தமிழ்ப் படங்களுக்கு ஆகும் செலவில் மூன்றில் ஒரு பகுதியைக் கொண்டே அந்தப் படங்களை எடுத்து முடித்துவிடலாம்.

"திரைப் பட உரிமையாளர்கள் என்னிடம் கலந்து பேசினால், அதற்கான வழிவகைகளைக் கூறத் தயாராக இருக்கிறேன்.

"தமிழ்த் திரைப் பட உலகில் தேவையற்ற காரியங்களுக்கெல்லாம் வீணாகப் பணம் செலவு செய்யப்படுகிறது' வீண் செலவைக் குறைத்தால் வருவாய் அதிகரிக்கும்!"

(பறங்கிமலை பட் ரோடில் நடந்த ஜெயந்தி திரைப்பட அரங்கு திறப்பு விழாவில்)

டிச. 7: கொடி நாள்

கவர்னர் வேண்டுகோள்

கொடி நாள் பற்றி பொதுமக்கட்கு கீழ்வருமாறு கவர்னர் வேண்டுகோள் விடுத்துள்ளார் :—

"வழக்கம்போல் இந்த ஆண்டும் டிசம்பர் 7-ஆம் நாள் கொடி நாள் வருகிறது. முன்னாள் படையினருக்கும், நிலம்—கடல்—வான் வழி எல்லைகளைக் காத்து நிற்கும் நமது பாதுகாப்புப் படையினருக்கும் நாம் ஆற்றவேண்டிய கடமையினை இந்த நாள் நினைவூட்டுகிறது.

"இந்த நாளில் கொடி விற்பனை மூலம் திரட்டப்படும் பணம், முன்னாள் படை வீரர்—அவர் தம் குடும்பத்தினர் துயர் துடைப்பதற்கும், சேவையிலுள்ள வீரர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்கும் முன்போலவே இப்பொழுதும் செலவிடப்படும்.

நமது படை வீரர்கள் எத்தகைய கடுமையான சூழ்நிலைகளில் நமது நாட்டையும், நம்முடைய உரிமையையும் காத்து நிற்கிறார்கள் என்பதை உணருவது **நமது கடமையாகும்.**